இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 29-11-2024

# மாற்றுத்திறனாளிகளுக்கான விழுதுகள்

விளிம்புநிலை மக்களுக்கான ஆட்சியாக ‘திராவிட மாடல்’ ஆட்சியை நடத்தி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர். அனைவருக்குமான அரசு என்பதன் உள்ளடக்கத்தில் அனைத்து மக்களும் இருக்கிறார்கள் என்பதை தனது ஒவ்வொரு திட்டங்களின் மூலமாகவும் மெய்ப்பித்துக் காட்டி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

கடந்த 25 ஆம் தேதியன்று சென்னை, சோழிங்கநல்லூர், கண்ணகி நகரில், மாற்றுத்திறனாளிகளுக்கு உடல்/மனம் சம்பந்தப்பட்ட மறுவாழ்வு சேவைகள் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள **விழுதுகள் - ஒருங்கிணைந்த சேவை மையத்தை** திறந்து வைத்துள்ளார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இது யாருக்கான அரசு என்பதன் அடையாளம் தான் ‘விழுதுகள்’ மையம் ஆகும்.

**மாற்றுத் திறனாளிகள் என்ற சொல்லை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது ஆட்சிக் காலத்தில் தான் அந்த விளிம்பு நிலை மக்கள் அடையாளம் காணப்பட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது ஆட்சியில் முழு வாழ்க்கையை நோக்கி அவர்கள் நகர்த்தப்பட்டு வருகிறார்கள்.**

மாற்றுத்திறனாளிகள் நலனுக்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.813.63 கோடி அளவில் நிதி ஒதுக்கீடு செய்து சிறப்பாக பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினார் முதலமைச்சர் அவர்கள். 2022-23 நிதியாண்டில் ரூ.838.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்களைத் தீட்டினார்கள். பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைவருக்கும் ரூ.1500 மாதம் வழங்க உத்தரவிட்டார்கள். மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் திட்டம் உலக வங்கி உதவியுடன் 6 ஆண்டு காலத்திற்கு ரூ.1702.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ மூன்று சக்கர மிதிவண்டிகள், சக்கர நாற்காலிகள், காதுகளுக்கு பின்புறம் அணியும் காதொலிக்கருவிகள், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள், பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள் ஆகிய 5 வகை உபகரணங்களின் 36 மாதிரிகளில் 7,219 உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

★ நகரப் பேருந்துகளில் (White Board Bus) மாற்றுத் திறனாளிகள் துணையாளர் ஒருவருடன் கட்டணமில்லாமல் சென்று வர அரசு ஆணை வெளியிடப்பட்டது.

★ UDD Card வழங்குவதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு 9 லட்சத்து 30 ஆயிரத்து 909 பயனாளிகள் பதிவு செய்யப்பட்டு இதுவரை 5 லட்சத்து 68 ஆயிரத்து 67 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

★ இடஒதுக்கீட்டில் அரசு மற்றும் தனியார் துறைகளிலும் வேலை வாய்ப்பு வழங்கவும், பொதுக் கட்டிடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற தடையற்ற சூழல்களை அமைக்க சமவாய்ப்பு கொள்கை “(Equal Opportunity Policy) அனைத்து தனியார் தொழிற்கூடங்கள் மற்றும் நிறுவனங்களில் நடைமுறைப்படுத்திட வலியுறுத்தப்பட்டுள்ளது.

★ **அரசு துறை கட்டிடங்களில் முக்கியமாக வருவாய் துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறைக்குச் சொந்தமான 790 கட்டடங்களில் ரூ.4.74 கோடி செலவிலும், 200 சுற்றுலா இடங்களில் ரூ.1.20 கோடி செலவில் தடையற்ற சுழல் அமைக்க தணிக்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

★ **அரசு வேலைவாய்ப்புகளில் Group A மற்றும் Group B பிரிவுகளில் 559 பணியிடங்கள் கண்டறியப்பட்டு, 1096 பின்னடைவு காலி பணியிடங்களை தனி சிறப்பு நேர்வாக (Special Drive) தமிழ்நாடு பணியாளர் தேர்வுவாரியம் (TNPSC) ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் (MRB) மாநில ஆட்சேர்ப்பு பணியகம் (SRB) மாவட்ட ஆட்சேர்ப்பு பணியகம் (DRB) மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை மூலமாக நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

★ கடுமையான இயலாமை - கடுமையான அறிவுசார்குறைபாடு - தசைச்சிதைவு மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்பு உதவித்தொகையாக வழங்கப்பட்டு வந்த ரூ. 1,500/- லிருந்து ரூ.2,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. செவித்திறன் குறைபாடுடைய மாணவர்கள் பயன்பெறும் வகையில் உயர்கல்வியில் பி.காம். பி.சி.ஏ. பாடங்கள் பட்டங்கள் படிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

★ மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் புரிய கடன் உதவி வழங்கும் திட்டத்தினை அறிவுசார் குறைபாடுடையோர், புறஉலக சிந்தனையற்றோர், தசைச்சிதைவு நோயினால், பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோருக்கும் நீட்டித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

★ மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் திருமண நிதியுதவி திட்டத்தின் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி உதவியினை பாதித் தொகை ரொக்கமாகவும், மீதமுள்ள தொகையினை தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கும் முறையினை மாற்றி முழுத்தொகையும் ரொக்கமாக வழங்கப்படும் திட்டத்திற்கான அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.

★ மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் புரிந்து வாழ்வில் முன்னேறுவதற்கு, தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. இதற்கு தற்போது உள்ள வயது உச்ச வரம்பினை 45 லிருந்து 60 ஆக நீட்டித்து உள்ளோம்.

★ அரசுப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் 1053 மாணாக்கர்களுக்கு தன் சுத்தம், உடல்நலம் பராமரிப்பதற்காக வழங்கும் சோப்பு, தேங்காய் எண்ணெய் வழங்குவதற்கான இதர செலவீனம் ரூ.30/-லிருந்து ரூ.50/- ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பொது கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் எளிதாகப் பயன்படுத்தப்படும் வகையில் தடைகளற்ற சூழலை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு நிறுவனம், தனியார் நிறுவனத்திற்கு ரூ.1.60 இலட்சம் செலவில் 2 மாநில விருதுகள் வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் மெரினா கடற்கரையில் கடலுக்கு அருகில் சென்று கடலைக் கண்டு ரசிக்கும் வகையிலான சிறப்பு நடைபாதையை மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது முயற்சியால் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகத்தான் ‘விழுதுகள்’ மையம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் அமையப் பெறவுள்ள 273 ஒருங்கிணைந்த சேவை மையங்களில் முதலாவது மையமாக சென்னை, சோழிங்கநல்லூர், கண்ணகி நகரில் அமைக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்பட இருக்கின்றன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருணை வழிப்பாதையில் அரசு செயல்பட்டு வருகிறது.**



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துகளோடு, 2022 அக்டோபர் 10 ஆம் நாளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் 234/77 ஆய்வுப் பயணத்தைத் தொடங்கினார் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு முழுவதும் பயணித்து 2024 நவம்பர் 14 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கொளத்தூர் தொகுதியில் ஆய்வை நிறைவு செய்தார். இதற்கான நிறைவு அறிக்கையை முதலமைச்சர் அவர்களிடம் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

## முன்னாள் பாதுகாப்புப் படையினருக்கான
# நலத்திட்டங்களைச் செயல்படுத்த சன் டி.வி. ரூ.75 லட்சம் கொடிநாள் நிதி!

**சென்னை, நவ.29-**

**முன்னாள் பாதுகாப்பு படையினருக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக கொடி நாள் நிதியாக 75 லட்சம் ரூபாயை சன் டி.வி. குழுமம் வழங்கியுள்ளது. ராணுவ வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில், டிசம்பர் 7ம் தேதி நாடு முழுவதும் படைவீரர் கொடி நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி, ராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக கொடி நாள் நிதி வசூலிக்கப்படுகிறது. நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான முன்னாள் படைவீரர்கள் இந்த நிதியின் மூலம் பயன் பெற்று வருகின்றனர்.**



அந்த வகையில், சன் டி.வி. குழுமம் கொடி நாள் நிதியாக 75 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இதற்கான காசோலையை சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடேவிடம் சன் டி.வி. சார்பில் மல்லிகா மாறன், காவேரி கலாநிதி மாறன் ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வின் போது, மாவட்ட துணை ஆட்சியர் ஹர்ஷத் பேகம், முன்னாள் ராணுவ வீரர்கள் நல வாரியத்தின் உதவி இயக்குநர் எட்வார்ட் ராஜ் மரியா ஜான், நரசிம்மன் உடனிருந்தனர்.

இந்திய பாதுகாப்பு படையின் ஓய்வுபெற்ற ராணுவ வீரர்கள் நலனுக்காக இந்த நிதி பயன்படுத்தப்பட இருப்பதாக முன்னாள் ராணுவ வீரர்கள் நலவாரிய உதவி இயக்குநர் எட்வார்ட் ராஜ் மரியா ஜான் தெரிவித்தார். கொடி விற்பனை வாயிலாக திரட்டப்படும் நிதி, முப்படை வீரர்களின் குடும்ப நலவாழ்விற்கும், உடல் உறுப்புகளை இழந்த வீரர்களின் மறுவாழ்விற்கும் பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் படை வீரர்கள் நலனுக்காக கொடி நாள் நிதி வழங்கிய சன் டி.வி., புயல், கொரோனா உள்ளிட்ட பேரிடர் நிகழ்வுகளின் போது, பல்வேறு அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. மேலும், ஏழை, எளிய மக்களுக்கான நலத்திட்டங்களுக்காகவும் சன் டி.வி. பல ஆண்டுகளாக நிதியுதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# அதானி முறைகேடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தல்!

## இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் தொடர் முழக்கங்கள்! இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைப்பு!

புதுடெல்லி, நவ.29-

அதானி முறைகேடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதம் நடத்த கோரி, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் நேற்று முன்தினம் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் மழைக்கால கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அதானி குழும முறைகேடு, மணிப்பூர் விவகாரம், சம்பல் துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து விவாதம் நடத்த கோரி காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதனிடையே, இந்திய அரசியல மைப்பு தினத்தை ஒட்டி, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஆற்றிய உரையில் சோசியலிஸ்ட், செக்குலர் போன்ற வார்த்தைகள் இடம் பெறாததை சுட்டிக்காட்டி விவாதம் நடத்த கோரி, மக்களவையில் தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு நோட்டீஸ் அளித்திருந்தார்.

அந்த வகையில் மூன்றாவது நாளான நேற்று முன்தினம், காலை மக்களவை கூடியதும், அதானி முறைகேடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதம் நடத்த கோரி, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டனர்.

இதனால் மக்களவையை சபாநாயகர் ஓம் பிர்லா, பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார். பின்னர் ஒத்தி வைக்கப்பட்ட அவை மீண்டும் கூடியதும் எதிர்க்கட்சியினர் அதானி முறைகேடு குறித்து விவாதிக்க வலியுறுத்தி முழக்கமிட்டனர். இதனையடுத்து மக்களவை நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

### மாநிலங்களவை ஒத்திவைப்பு!

இதே போல், மாநிலங்களவை முற்பகல் 11 மணிக்கு தொடங்கியதும், அதானி முறைகேடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதம் நடத்த கோரி, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டனர். இதனால் மாநிலங்களவை தலைவர் ஜெகதீப் தன்கர் அரை மணி நேரம் ஒத்தி வைத்தார். அரை மணி நேரத்திற்கு பிறகு அவை கூடியதும், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து தங்கள் கோரிக்கையை வலியுறுத்திய நிலையில், மாநிலங்களவையும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

## ஒட்டன்சத்திரத்தில் துணை முதலமைச்சர் பிறந்த நாள் விழா!

ஒட்டன்சத்திரம், நவ.29-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆலோசனையின்பேரில் தமிழக துணைமுதலமைச்சர்உதயநிதிஸ்டாலின் பிறந்த நாள் விழா குறிஞ்சிநகர், நாகணம்பட்டியில்நகர செயலாளர் வெள்ளைச்சாமி தலைமையில்கொடியேற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாவட்ட அவைத்தலைவர் மோகன், நகரமன்ற தலைவர் திருமலைசாமி, கண்ணன், பாலு, வேலுச்சாமி, இளமதி உள்ளிட்ட நகர் மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம். கடலூர் துறைமுகம், ட்ரிபிள் எம் மண்டபத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றினார். கூட்டத்தில் துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் உறுப்பினருமான, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கடலூர், கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் எம்.ஆர்.கே. கல்வி குழுமத்தின் தலைவர் எம்.ஆர்.கே.பி. கதிரவன் வெள்ளி செங்கோல் வழங்கினார்கள். உடன் கழக இளைஞரணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், கடலூர் மாநகரச் செயலாளர் கே.எஸ்.ராஜா மற்றும் கழக மாவட்ட அமைப்பாளர்களும் உடன் இருந்தனர்.